# பாதுகாப்பு அமைச்சு

# இலங்கை இராணுவம்

## விலை மனு கோரல் (IFB)

## இலங்கை இராணுவத்திற்கான உராய்வு காப்பு எண்ணெய் மற்றும் கிரீஸ் வழங்கல் மற்றும் விநியோகத்திற்கான கொள்வனவு - 2025

ஒப்பந்த அடையாள இலக்கம். ***SLA/S&T/03/ LUB& OIL/2025(14)***

1. இலங்கை இராணுவத்தின் இரத்மலானை சுயாதீன விநியோக களஞ்சிய நிலையத்திற்கான உராய்வு காப்பு எண்ணெய் மற்றும் கிரீஸ் வழங்குதலுக்கான ஒப்பந்தத்திற்காக அமைச்சின் கொள்வனவு குழுவின் (MPC) தலைவர் மூலம் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வழங்கல் காலம்: **2025 மார்ச் 01 முதல் 2025 டிசம்பர் 31 வரை.**

2. விலைமனு கோரல் செயல்முறை 2024 அரசாங்க கொள்முதல் வழிகாட்டலின் பிரிவு 3.1.2 இன் அடிப்படையில் தேசிய போட்டித் தொடர்முறை (NCB) மூலம் நடத்தப்படும். உள்ளூர் மனுதாரர்கள் விலைமனுக்கள் வழங்க அனுமதிக்கப்படுவார்கள். உராய்வு காப்பு எண்ணெய் மற்றும் கிரீஸ் பொருட்களின் அனைத்து விவரங்களும் மற்றும் குறிப்புரைகளும் விலைமனு ஆவணத்தில் வழங்கப்படும்.

**3. உராய்வு காப்பு எண்ணெய் மற்றும் கிரீஸ் பொருட்களின் ஒவ்வொரு உருப்படி்.வகையின் கீழும் தனித்தனியாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

3.1 விலைமனுக்கள் ஒவ்வொரு உருப்படிக்காகவும் மற்றும் ஒவ்வொரு வகைக்கும் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட ஒரு வகைக்கான விலை மனுவைச் சமர்ப்பிக்கும் போது, அந்த வகையின் அனைத்து உருப்படிகளுக்கும் விலைமனு வழங்குவது கட்டாயமாகும். குறிப்பிட்ட வகையின் அனைத்து உருப்படிகளுக்கும் விலை மனு வழங்க தவறினால், அந்த விலை மனு பதிலளிக்காத விலை மனுவாக (ழேே-சநளிழளௌைந டினை) கருதப்படும்.

3.2 மனுதாரரின் திறன்களைப் பொருத்து, அவை கொள்வனவாளரால் மதிப்பீடு செய்யப்படும். இதற்கு எந்த மனுதாரரும் உருப்படிகளுக்காகவும் மற்றும் உருப்படிகளின் தொடர்புடைய வகைக்காகவும் தனித்தனியாக விலை மனுக்களை சமர்ப்பிக்க முடியும். இதற்கான இரண்டு தொகுதிகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

3.2.1 **குழு A - உராய்வு காப்பு எண்ணெய் பொருட்களின் வழங்கல் (உருப்படி அடிப்படையிலான கொள்முதல்)**
இந்த குழு 06 பொருள் உருப்படிகளுக்கான 06 விலைமனுக்கோரல்களை கொண்டுள்ளது, அவை "உருப்படி அடிப்படையிலான கொள்வனவுகளாக" கருதப்படும், மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறை ஒவ்வொரு உருப்படிக்கும் தனியாகச் செயல்படுத்தப்படும். (இணைப்பு I)

3.2.2 **குழு B - உராய்வு காப்பு எண்ணெய் பொருட்களின் வழங்கல் (வகை அடிப்படையிலான கொள்முதல்)**
இந்த குழு 07 பொருள் வகைகளுக்கான 07 விலைமனுக்கோரல்களைக் கொண்டுள்ளது, இதில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட உராய்வு காப்பு எண்ணெய் பொருட்கள் அடங்கியிருக்கும், அவை "வகை அடிப்படையிலான கொள்வனவுகளாக" கருதப்படும். மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறை குறிப்பிட்ட வகையைப் பொருத்து தனியாகச் செயல்படுத்தப்படும். (இணைப்பு I)

4. விலை மனுதாரர் தடுப்புப் பட்டியலில் சேர்க்கப்படாதவராக இருத்தல் வேண்டும், மேலும் கீழ்காணும் குறைந்தபட்ச தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.1. உராய்வு காப்பு எண்ணெய் மற்றும் கிரீஸ் வழங்கல் துறையில் ஏதேனும் ஒரு (01) ஆண்டுக்கான குறைந்தபட்ச சராசரி வருடாந்த விற்பனை கடந்த இரண்டு (02) ஆண்டுகளுக்கு உடனடியாக ரூ.2 மில்லியனாக காணப்படல் வேண்டும். அது கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மூலம் உறுதி செய்யப்படல் வேண்டும்.

4.2. 2023/2024 நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் குறைந்தபட்சம் ரூ.1 மில்லியன் திரவ சொத்துக்கள் (காசு மீதி, வங்கி மீதி, குறுகிய கால முதலீடுகள் மற்றும் கடன்பட்டோர் கணக்குகள்) உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

4.3. இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட, இலங்கையில் செயல்படும் ஒரு வணிக வங்கி அல்லது நிதி நிறுவனம், குழு யு இன் இலக்கம் 4 மற்றும் குழு �டீ இன் அனைத்து சலுகைகளுக்கும் குறைந்தபட்ச கடன் வசதி உத்தரவாதம் (இந்த டெண்டருக்கு மட்டும்) ஒரு மில்லியன் (ரூபாய்) ஆகும்.

4.4. கடந்த மூன்று (3) ஆண்டுகளின் அடிப்படையில், நவீன ஒப்பந்தங்களையும் உள்ளடக்கி, உராய்வு காப்பு எண்ணெய் மற்றும் க்ரீஸ் பொருட்களின் வழங்கலில் ஒரே ஆண்டிற்கான முந்தைய தொடர்புடைய அனுபவம் இணைப்பு ஏ (படிவம் 01) - இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருத்தல் வேண்டும். சான்றளிக்கப்பட்ட நகல்கள் இணைக்கப்படல் வேண்டும்.

5. விலை மனு ஆவணங்களை வழங்குவது, சமர்ப்பிப்பது மற்றும் மூடும் திகதிகள் மற்றும் நேரங்கள் பின்வருமாறு உள்ளன. தொடர்புடைய மனுதாரர்கள் அல்லது அதிகாரப்பூர்வ பிரதிநிதிகள் இந்த விலை மனு திறப்பு நிகழ்வில் பங்கேற்கலாம். காலதாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| அ) விலை மனு ஆவணங்கள் வழங்கப்படும் ஆரம்பத் திகதி | - | 2025.01.20 முதல் |
| ஆ) விலை மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி | - | 2025.02.10 ஆம் திகதி மாலை 03.00 மணி வரை. |
| இ) விலை மனுக்கள் சமர்ப்பிக்கும் இறுதி திகதி | - | 2025.02.11 ஆம் திகதி காலை 11.00 மணி வரை. |
| ஈ) விலை மனுக்கள் திறக்கப்படும் இடம், திகதி, நேரம் | - | 2025.02.11 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு பாதுகாப்பு அமைச்சின், கொள்முதல் கிளை, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே. |

6. முன்- விலை மனுக் கூட்டம் **30.01.2025 அன்று காலை 11.00 மணிக்கு, இலங்கை இராணுவ தலைமையகம், பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி, அகுரேகொட வீதி, பத்தரமுல்ல** (இராணுவ தலைமையக வாகன தரிப்பிடத்தல்) நடைபெறும். இந்தக் கூட்டத்தில், ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.

7. ஆங்கில மொழியில் உள்ள முழுமையான விலை மனு ஆவணத் தொகுப்பை, கொடுக்கப்பட்ட விலாசத்தில் பந்தி **11**-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பாளருக்கு எழுத்து மூலம் விண்ணப்பம் சமர்ப்பித்த பிறகு, நிலையத்துக்கான மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி விண்ணப்பதாரர்கள் வாங்கலாம். மீளளிக்கப்படாத கட்டணம், கொள்முதல் வழிகாட்டி 2024 இல் கூறப்பட்ட பொருட்கள், பணிகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளுக்கான விதிமுறைகளின் படி இருத்தல் வேண்டும்.

8. விலை மனுவை சமர்ப்பிக்க, மனுதாரர்கள் விலை மனு ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். முத்திரையிடப்பட்ட அசல் விலை மனு மற்றும் நகல் முத்திரையிடப்பட்ட விலை மனுவை தனித்தனியாக ஒரு மூடப்பட்ட உறையில் பதிவு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது மேலே பந்தி 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சு, கொள்வனவு கிளை, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே என்ற முகவரியில் உள்ள விலை மனு பெட்டியில் இடுதல் வேண்டும். .

9. விலை மனுக்கள் **2025.05.15** ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

10. விலை மனுக்கள் **2025.06.15** வரை செல்லுபடியாகும் ஒரு விலை மனு பாதுகாப்புடன் இணைக்கப்பட்டு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு விலாசமிடல் வேண்டும். இந்த விலை மனு பாதுகாப்பு, இலங்கையில் செயல்படும் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வணிக வங்கியால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இது வங்கியின் கடித தலைப்புரையில் வழங்கப்படல் வேண்டும், நிபந்தனையற்றது, மீளக் கூடியதல்லாதது மற்றும் தேவைப்படும் போதே செயல்படக்கூடியதாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட விலை மனுக்கோரலுக்கான பாதுகாப்புத் தொகையின் விவரங்கள், கொள்வனவு வழிகாட்டி - 2024 யின் படி அமைக்கப்பட்டுள்ள விலை மனுக்கோரல் ஆவணத்துடன் வழங்கப்படும்.

11. தகுதியுள்ள விலை மனுதாரர்கள், இலங்கை இராணுவத் **தலைமையகத்தின் வழங்கல் மற்றும் போக்குவரத்து பணியகத்தில்**, முழுமையான விலை மனு ஆவணங்களை ஆங்கில மொழியில் பெறலாம். அதற்காக, எழுத்து மூலம் விண்ணப்பத்தை **2025 ஜனவரி 20 முதல் 2025 பெப்ரவரி 10 வரை,** வேலை நாட்களில் **0900 மணி முதல் மாலை 1500 மணி** வரை, கீழே உள்ள முகவரியில் சமர்ப்பித்தல் வேண்டும்: **பணிப்பகம், வழங்கல் மற்றும் போக்குவரத்து, இலங்கை இராணுவத் தலைமையகம், பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி, அக்குரேகொட வீதி, பத்தரமுல்ல, இலங்கை.** தொடர்புக்கு: தொலைபேசி - **011 2302569, 011 2302568** மின்னஞ்சல் - **dteofsuptender@gmail.com**

12. இலங்கை இராணுவ தலைமையக வளாகத்திற்குள் நுழைவதற்கு ஒரு நாளுக்கு முன்பு, **பணிப்பாளர் நாயகத்தால் மற்றும் போக்குவரத்து பணிப்பகம் இராணுவ தலைமை பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி, அக்குரேகொட வீதி, பத்தரமுல்ல** எனும் முகவரிக்கு பங்கேற்கும் நபர்களின் பெயர்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு எண்களை எழுத்து மூலமாக தகவல் அளிக்குமாறு உரியவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஆவணங்களை பரிசீலிக்க/வாங்க மற்றும் விலை மனு திறப்புக்கு பங்கேற்கும் நபர்கள் பற்றிய விவரங்கள் மின்னஞ்சல் மூலம் **(dtesandt0@gmail.com)** அல்லது தொடர்பு எண்கள்: **011 2302569, 011 2302568** என்ற எண்ணில் தெரிவித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சு கொள்வனவு குழு,**
**2025 ஆம் ஆண்டுக்கான இலங்கை இராணுவத்திற்கான உராய்வு காப்பு எண்ணெய் மற்றும் க்ரீஸ் வழங்கல் மற்றும் விநியோகத்திற்கான கொள்வனவு, பாதுகாப்பு அமைச்சு**

**19.01.2025**

SELACINE